IRC: F48:83:332:2021

20.07.2021

The Manager,
National Stock Exchange of India Ltd,
Exchange Plaza, 5th Floor,
Plot No. C/1, 'G' Block,
Bandra - Kurla Complex,
Bandra (East), Mumbai - 400 051

Scrip Code: KARURVYSYA

The Manager,
Bombay Stock Exchange limited,
Phiroze Jeejeebhoy Towers,
Dalal Street,
Mumbai – 400001

Scrip Code: 590003

Dear Sir,

Sub: Regulation 47 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015 – Newspaper Publication regarding Notice of 102nd Annual General Meeting of Bank, e-Voting and related matters.

*****

We wish to inform you that the Bank has made an Advertisement informing the shareholders about the Notice of the 102nd Annual General Meeting ('AGM') of the Bank scheduled on 11th August 2021 at 11:00 a.m. through Video Conferencing (VC) or Other Audio Visual Means (OAVM), in compliance with the extant guidelines issued by Ministry of Corporate Affairs (MCA) & Securities Exchange Board of India (SEBI), e-Voting and other related matters for the purpose of AGM.

We hereby submit the copies of the Advertisement published in Business Standard and Vernacular (i.e., Tamil) Newspaper – Dinamalar on 20th July 2021 in this regard.

Kindly take the same on record.

Srinivasarao M
Company Secretary &
Asst. General Manager

Encl: as above

THE KARUR VYSYA BANK LIMITED
Investor Relations Cell, Registered & Central Office,
No.20, Erode Road, Vadivel Nagar, L.N.S.,
Karur - 639 002.
©: 04324-269431,35,40-43, Fax: 04324-225700
Email: kvbshares@kvbmail.com
Website: www.kvb.co.in
CIN: L65110TN1916PLC001295

Business Standard CHENNAI | TUESDAY, 20 JULY 2021

KVB Karur Vysya Bank
Smart way to bank

# THE KARUR VYSYA BANK LIMITED

Registered & Central Office, No. 20, Erode Road, Vadivel Nagar, L.N.S., Karur – 639002
[CIN No: L65110TN1916PLC001295]
[e-mail:kvb_sig@kvbmail.com] [Website: www.kvb.co.in]
[Tel No: 04324-269441] [Fax No: 04324-225700]

## NOTICE OF 102ND ANNUAL GENERAL MEETING (AGM) TO BE HELD THROUGH VIDEO CONFERENCING ("VC") OR OTHER AUDIO VISUAL MEANS ("OAVM")

Notice is hereby given that the 102nd Annual General Meeting (AGM) of The Karur Vysya Bank Limited (the "Bank") will be held on Wednesday, 11th August 2021 at 11:00 a.m. IST through Video Conferencing ("VC")/Other Audio Visual Means ("OAVM") to transact the businesses set out in the Notice of the AGM.

The Bank has sent the 102nd AGM Notice along with Annual Report for the Financial Year 2020-21 on July 19, 2021, through electronic mode to members whose email addresses are registered with Bank/Registrar and Share Transfer Agent/Depository Participants (DP) and as per the data downloaded from the Depository Participant(s) as on July 16, 2021, in compliance with Circular Nos. 20/2020 dated May 5, 2020 and 02/2021 dated January 13, 2021, read together with Circular Nos. 14/2020 dated April 08, 2020 and 17/2020 dated April 13, 2020 issued by Ministry of Corporate Affairs ('MCA') and Circular No. SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 dated January 15, 2021 read with Circular No. SEBI/HO /CFD/CMD1/CIR/P/2020/79 dated May 12, 2020 issued by Securities Exchange Board of India.

Members may also download the copy of the Annual Report and Notice from the website of the Bank https://www.kvb.co.in/investor-corner/annual-general-meeting/ and websites of the Stock Exchange i.e. National Stock Exchange of India Limited (NSE) at https://www.nseindia.com, and on the website of National Securities Depository Limited (NSDL) at https://www.evoting.nsdl.com.

Members can attend and participate in the AGM through VC/OAVM facility. The instructions for joining the AGM are provided in the Notice of AGM. Members attending the AGM through VC / OAVM shall be counted for the purpose of reckoning the quorum under Section 103 of the Companies Act, 2013.

**DATES OF BOOK CLOSURE:**

Notice is also hereby given, Pursuant to the provisions of Section 91 of the Companies Act, 2013 (the "Act") and the rules made thereunder and in compliance with the Regulation 42 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, the Register of Members and Share Transfer Books of the Bank will remain closed from **Tuesday, July 27, 2021 to Wednesday, August 11, 2021** (both days inclusive).

**MANNER OF CASTING VOTE(S) THROUGH E-VOTING:**

In terms of Section 108 of the Companies Act, 2013 read with Rule 20 of the Companies (Management and Administration) Rules, 2014 and Regulation 44 of SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015, and any amendments thereto, the Bank is providing e-Voting facility to all its Members holding shares in physical and dematerialized form to exercise their right to vote by electronic means through remote e-Voting on any or all of the business specified in the Notice of the AGM.

The Bank has engaged National Depository Services Limited (NSDL) to provide remote e-Voting Facility. A Member whose name appears in the Register of Members or in the Register of Beneficial owners maintained by Bank's RTA/ Depositories as at the end of the business hours on **Wednesday, August 4, 2021** (i.e., Cut-off Date) shall be entitled to avail the facilities of remote e-Voting, and vote at the AGM by electronic means. The schedule of remote e-Voting facility is as detailed below:

| | | |
|---|---|---|
| Remote e-Voting | Commences on | Saturday, August 7, 2021 at 10:00 a.m. |
| | Ends on | Tuesday, August 10, 2021 at 5:00 p.m. |

All the Members are further informed that:

1) The remote e-Voting module shall be disabled by NSDL at 5.00 p.m. on August 10, 2021. Once the vote on a resolution is cast by the Member, the Member shall not be allowed to change it subsequently.
2) Further, an eligible Member may participate in the AGM through VC/OAVM even after exercising his right to vote through remote e-Voting, but shall not vote again during the AGM.
3) Members who are present in the AGM through VC/OAVM and have not cast their vote on resolutions through remote e-Voting shall be eligible to cast their vote through e-Voting during the AGM.
4) Members can join the AGM through VC / OAVM mode before 30 minutes of the time scheduled for the AGM by following the procedure mentioned in the Notice. The facility to join through VC / OAVM will be available for Members on first come first serve basis.
5) Any person who acquires shares of the Bank and becomes a Member of the Bank after the dispatch of the Notice of AGM and holding shares on cutoff date i.e., **Wednesday, August 04, 2021,** may obtain the login ID and Password of e-Voting by sending a request at kvb_sig@kvbmail.com or info@skdc-consultants.com or evoting@nsdl.co.in. A person who is not a member as on the cutoff date should treat this notice for information purpose only.
6) The Board of Directors has appointed Shri R K Bapulal (FCS No. 5893), M/s Bapulal Yasar & Associates as the Scrutiniser to scrutinise the e-Voting process and e-Voting at AGM in a fair and transparent manner.
7) All correspondence/queries/grievances relating to remote e-Voting by electronic means may be addressed to Mr. Siva Kumar I, Manager, The Karur Vysya Bank Ltd, Investor Relations Cell, No. 20, Erode Road, Vadivel Nagar, L.N.S., Karur - 639002 (Phone no. 04324- 269441; e-mail ID: kvb_sig@kvbmail.com) or Mr. K Jaya Kumar, Manager, M/s S.K.D.C. Consultants Ltd., ('a Wholly Owned Subsidiary of Link Intime India Private Limited'), (Unit: KVB Ltd), "Surya", 35, Mayflower Avenue, Behind Senthil Nagar, Sowripalayam Road, Coimbatore -641028 Tel: 0422 - 2539835, 2539836, 4958995 e-Mail: info@skdc-consultants.com.
8) In case of any queries/grievances in relation to voting by electronic means can be addressed to NSDL, Ms. Pallavi Mhatre, (Manager), NSDL, 4th Floor, 'A' Wing, Trade World, Kamala Mills Compound, Senapati Bapat Marg, Lower Parel, Mumbai – 400 013. e-Mail: evoting@nsdl.co.in, Tel: 1800 102 0990/ 1800 22 4430.

**DIVIDEND & TAX DEDUCTED AT SOURCE THERE ON:**

Members may note that the Board of the Directors, in their meeting held on 28th May 2021 recommended Dividend of ₹ 0.50 per equity share of face value of ₹ 2/- each for the Financial Year ended 31st March 2021, subject to approval of the statutory authorities and shareholders of the Bank in the Annual General Meeting. Pursuant to amendments in the Income Tax Act, 1961 introduced by the Finance Act, 2020 dividend income is taxable in the hands of shareholders w.e.f April 01, 2020 and the Bank is required to deduct tax at source (TDS) from dividend paid to shareholders at the prescribed rates. The rate of TDS would vary depending on the residential status of the shareholder and documents registered with the Bank.

Members may note that Bank has sent a communication with respect to deduction of TDS and created a utility in the Bank's website at https://www.kvb.co.in/investor-corner/tds-on-dividend/ for submitting the documents related to claiming of exemption. Members may also submit the documents at email id green@skdc-consultants.com through their registered email ids. All the communications on tax determination/ tax deductions shall be received before **31st July 2021**

**PROCEDURE TO UPDATE E-MAIL DETAILS IN FOLIO NO./DP&CL ID:**

For the Members who have already registered their e-Mail ids with the Bank/RTA or the DP(s), the notice of AGM and Annual report have been sent on their registered e-mail address.

We request the members of the Bank, who have not registered their e-Mail id(s) to update the same in the following manner:

| | |
|---|---|
| a) For the shares held in physical form | The details shall be registered with Bank's RTA i.e., M/s SKDC Consultants Ltd. |
| b) For the shares held in electronic form (i.e., Demat) | The details shall be updated with the concerned Depository Participant (DP) where the Demat account is maintained. |

For registration of e-Mail id(s) in case of physical folios, members are requested to send the scanned copy of request letter duly signed by furnishing the details of name, folio no, email id, mobile number and PAN (self-attested copy to be enclosed) to the Bank's RTA, M/s. S.K.D.C. Consultants Limited through e-Mail id info@skdc-consultants.com.

**For The Karur Vysya Bank Limited**
Srinivasa Rao M
Company Secretary
(Membership No. ACS 19189)

Place : Karur
Date : July 20, 2021

Karur Vysya Bank
Smart way to bank

**THE KARUR VYSYA BANK LIMITED**
Registered & Central Office, No. 20, Erode Road, Vadivel Nagar, L.N.S., Karur – 639002
[CIN No: L65110TN1916PLC001295]
[e-mail:kvb_sig@kvbmail.com] [Website: www.kvb.co.in]
[Tel No: 04324-269441] [Fax No: 04324-225700]

# அறிவிப்பு

## காணொலி காட்சி வாயிலாக நடைபெறும் 102வது வருடாந்திர மகாசபை கூட்டம்

நிகழும் 2021 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 11ஆம் தேதி புதன்கிழமை காலை 11 மணி அளவில் மகாசபை கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள தீர்மானங்களை நிறைவேற்றும் பொருட்டு வங்கியின் 102வது வருடாந்திர மகாசபை கூட்டம் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெறும் என்பதை வங்கி உறுப்பினர்களின் மேலான கவனத்திற்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்திய அரசின் பெருநிறுவனங்கள் விவகாரத்துறை அமைச்சகமும் (MCA), இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியமும் (SEBI) வெளியிட்டுள்ள பல்வேறு சுற்றறிக்கைகளுக்கு இணங்க (சுற்றறிக்கைகள் விவரம்: Ministry of Corporate Affairs (MCA) Circulars Nos. 20/2020 dated 05.05.2020, 02/2021 dated 13.01.2021, 14/2020 dated 08.04.2020 and 17/2020 dated 13.04.2020; SEBI Circular Nos. SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 dated 15.01.2021, SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 dated 12.05.2020) வங்கியின் 102வது மகாசபை கூட்ட அறிவிப்பும் 2020-21ஆம் நிதி ஆண்டின் ஆண்டு அறிக்கையும் மின்னஞ்சல் முகவரியினை வங்கியிடமோ, முதலீட்டு பங்கேற்பாளரிடமோ (Depository Participant), வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவரிடமோ (Registrar & Transfer Agent) பதிவு செய்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் 16.07.2021 அன்று தரவிறக்கம் செய்யப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மின்னஞ்சல் மூலமாக 19.07.2021 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் 102வது மகாசபை கூட்டத்திற்கான அறிவிப்பு மற்றும் 2020-21 ஆம் ஆண்டிற்கான ஆண்டு அறிக்கை ஆகியவற்றை வங்கியின் இணைய தளத்திலும் (https://www.kvb.co.in/investor-corner/annual-general-meeting/), தேசிய பங்குச் சந்தை (NSE - www.nseindia.com) மற்றும் தேசிய பங்குகள் வைப்பு நிறுவனம் (NSDL - https://www.evoting.nsdl.com) ஆகியவற்றின் இணையதளங்களிலும் உறுப்பினர்கள் தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

வங்கியின் உறுப்பினர்கள் காணொலி காட்சி வாயிலாக மகாசபை கூட்டத்தில் பங்கேற்க முடியும். மகாசபை கூட்டத்தில் பங்கெடுப்பது தொடர்பான நெறிமுறைகள் மகாசபை கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்டுள்ளது. காணொலி காட்சி வாயிலாக பங்கேற்கும் உறுப்பினர்களது எண்ணிக்கையின் அடிப்படையில் நிறுமச்சட்டம் 2013 பிரிவு 103ன் படி மகாசபை கூட்டம் நடத்துவதற்கு "போதுமான அளவில் உறுப்பினர்கள் பங்கேற்பு" (Quorum) குறித்து கணக்கிடப்படும்.

**வங்கி பதிவேடுகள் மூடப்படும் தேதிகள் குறித்த விவரம் (Dates of Book Closure) :**

நிறுமங்கள் சட்டம் 2013, பிரிவு 91 மற்றும் அதன்கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளின் படியும் மேலும்இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியலிடுவதற்கான கடமைகள் மற்றும் தேவையான வெளியீடுகள்) கட்டுப்பாடுகள், 2015 (SEBI LODR 2015) -ன் 42வதுகட்டுப்பாட்டின் படியும், வங்கியின் உறுப்பினர் பதிவேடு மற்றும் பங்கு மாற்றுபுத்தகம் ஆகியவை 27.07.2021 முதல் 11.08.2021 வரை மூடப்பட்டு இருக்கும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**மின் வாக்களிப்பு (E-VOTING) முறை குறித்த விவரங்கள் :**

நிறுமச் சட்டம், 2013-ன் பிரிவு 108, நிறுமங்கள் நிர்வாகம் மற்றும் மேலாண்மை விதிகள், 2014-ன் விதி எண் 20 மற்றும் இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியலிடுவதற்கான கடமைகள் மற்றும் தேவையான வெளியீடுகள்) கட்டுப்பாடுகள், 2015 (SEBI LODR, 2015) -ன் 44வது கட்டுப்பாடு ஆகியவற்றுக்கும் மேலும் இவைகளின் திருத்தங்களுக்கும் இணங்க, பங்குகளை மின்னணு பங்குகளாகவும் (Demat Shares) மற்றும் பங்குப்பத்திரங்களாகவும் (Physical Shares) வைத்துள்ள அனைத்து உறுப்பினர்களும் மகாசபை கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள அனைத்து தீர்மானங்களுக்குமோ அல்லது ஏதேனும் குறிப்பிட்ட தீர்மானத்திற்குமோ தங்களின் வாக்கு அளிக்கும் உரிமையை பயன்படுத்துவதற்கு ஏதுவாக தொலைதூர மின் வாக்களிப்பு வசதியினை (remote e-voting) தேசிய பங்குகள் வைப்பு நிறுவனத்தின் (NSDL) வாயிலாக வங்கி ஏற்படுத்தி கொடுத்துள்ளது.

வங்கியின் உறுப்பினர் பதிவேடு (Register of Members) அல்லது வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவர் (RTA)/முதலீட்டு பங்கேற்பாளர் (Depository Participant) ஆகியோரால் நிர்வகிக்கப்படும் உறுப்பினர் உரிமை பதிவேடு (Register of Beneficial Owners) ஆகியவற்றில் 04.08.2021-ம் நாளன்று அலுவல் நேர முடிவில் பட்டியலில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் தொலைதூர மின்-வாக்களிப்பு வசதி மற்றும் மகாசபை கூட்டத்தில் மின்-வாக்களிப்பு வசதி ஆகியவற்றை பயன்படுத்தி வாக்கு அளிக்கும் உரிமை பெற்றவர்களாவர். தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறையானது பின்வரும் கால அட்டவணைப்படி நடைபெறும் :

| | | |
|---|---|---|
| தொலைதூர மின்னணு வாக்களிப்பு | தொடங்கும் நாள் மற்றும் நேரம் | 07.08.2021 காலை 10:00 மணி |
| | முடியும் நாள் மற்றும் நேரம் | 10.08.2021 மாலை 05:00 மணி |

**வங்கி உறுப்பினர்களின் மேலான கவனத்திற்கு:**

1) தேசிய பங்குகள் வைப்பு நிறுவனத்தின் (NSDL)வாயிலாக நடைபெறும் தொலைதூர மின்-வாக்களிப்பு முறையானது 10.08.2021 அன்று மாலை 5.00 மணியளவில் நிறைவு பெறும். தீர்மானத்தன் மீது ஒருமுறை செலுத்தப்படும் வாக்கு மீண்டும் மாற்றதக்கதல்ல.
2) காணொலி காட்சி வாயிலாக நடைபெறும் வருடாந்திர மகாசபைக் கூட்டத்தில் பங்கேற்க தகுதி உள்ள ஒரு உறுப்பினர் தொலைதூர மின்-வாக்களிப்பு முறையில் வாக்களித்த பின்பும் மகாசபை கூட்டத்தில் கலந்து கொள்ளலாம். ஆனால் மகாசபை கூட்ட நாளன்று மீண்டும் வாக்களிக்க இயலாது.
3) காணொலி காட்சி வாயிலாக நடைபெறும் வருடாந்திர மகாசபை கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்களில், தொலைதூர மின்-வாக்களிப்பு (remote e-Voting) முறையினை பயன்படுத்தி தீர்மானங்கள் மீது வாக்களிக்காத உறுப்பினர்கள் மட்டுமே மகாசபை கூட்ட நாளன்று நடைபெறும் மின்-வாக்களிப்பு (e-Voting) முறையில் வாக்களிக்க தகுதி பெற்றவர்களாவர்.
4) காணொலி காட்சி வாயிலாக நடைபெறும் வருடாந்திர மகாசபை கூட்டத்தில் கலந்து கொள்ளும் உறுப்பினர்கள் மகாசபை கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள வழிமுறைகளை பின்பற்றி மகாசபை கூட்டம் தொடங்குவதற்கு முப்பது நிமிடங்கள் முன்னதாக தங்களை இணைத்துக் கொள்ளலாம். காணொலி காட்சி வாயிலாக மகாசபைக் கூட்டத்தில் உறுப்பினர்கள் இணைந்து கொள்ளும் வசதியானது முதலில் வருபவர்களுக்கே முன்னுரிமை என்ற அடிப்படையில் வழங்கப்படும்.
5) மகாசபை கூட்ட அறிவிப்பு அனுப்பப்பட்ட நாளுக்கும் மகாசபைக் கூட்டத்தில் பங்கேற்று வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்கள் பட்டியலை இறுதி செய்யும் நாளான 04.08.2021-ம் நாளன்று அலுவல் நேர முடிவுக்கும் இடையில் வங்கியின் பங்குகளை வாங்கியதன் மூலமாக உறுப்பினராக உள்ளவர்கள், தொலைதூர / மின்-வாக்களிப்பு முறையில் வாக்களிப்பதற்கான பயனர் பெயரையும் (Login ID), கடவுச் சொல்லையும் (Password), kvb_sig@kvbmail.com அல்லது info@skdc-consultants.com அல்லது evoting@nsdl.co.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம். மகாசபைக் கூட்டத்தில் பங்கேற்று வாக்களிக்க தகுதியுள்ள உறுப்பினர்கள் பட்டியலை இறுதி செய்யும் நாளான 04.08.2021-ம் நாளன்று உறுப்பினராக அல்லாதவர்களுக்கு மகாசபை கூட்ட அறிவிப்பு என்பது ஒரு தகவலுக்காக மட்டுமே.
6) மகாசபை கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள தீர்மானங்கள் மீதான வாக்கெடுப்பு நடைமுறைகளை வெளிப்படைத்தன்மையுடனும் உண்மையாகவும் நடத்துவதற்கு ஏதுவாக திரு. ஆர் கே பாபுலால், (FCS No. 5893), M/s. பாபுலால் யாசர் & அசோசியேட்ஸ் அவர்களை பரிசீலனை அதிகாரியாக வங்கியின் இயக்குநரவை நியமித்துள்ளது.
7) தொலைதூர மின்னணு வாக்களிப்பு முறை தொடர்பான சந்தேகங்கள் மற்றும் குறைகள் ஏதேனும் இருப்பின் உறுப்பினர்கள், திரு. சிவக்குமார் I, மேலாளர், கரூர் வைஸ்யா வங்கி, முதலீட்டாளர்கள் தொடர்பு பிரிவு (Investor Relations Cell), எண்: 20, ஈரோடு சாலை, வடிவேல் நகர், எல்.என்.எஸ்., கரூர் - 639 002 (தொலைபேசி எண்: 04324-269441; மின்னஞ்சல்: kvb_sig@kvbmail.com) அவர்களையோ அல்லது திரு. ஜெய குமார். K, மேலாளர், M/s. SKDC Consultants Ltd, பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவர், (யூனிட்: கரூர் வைஸ்யா வங்கி), "சூர்யா", 35, மே பிளவர் அவென்யு, செந்தில் நகர் பின்புறம், சவுரிபாளையம் சாலை, கோயம்புத்தூர் - 641028. (தொலைபேசி எண்: 0422-2539835/836, 4958995; மின்னஞ்சல் : info@skdc-consultants.com) அவர்களையோ தொடர்பு கொள்ளலாம்.
8) Ms. Pallavi Mhatre, Manager, NSDL, 4th Floor, 'A' Wing, Trade World, Kamala Mills Compound, Senapati Bapat Marg, Lower Patel, Mumbai - 400 013. தொலைபேசி எண்: 1800 102 0990 / 1800 22 4430, மின்னஞ்சல்: evoting@nsdl.co.in என்ற முகவரியை தொடர்பு கொள்வதன் மூலமாக மின்-வாக்களிப்பு முறை தொடர்பான மேலதிக தகவல்களை உறுப்பினர்கள் பெறலாம்.

**பங்காதாயம் (Dividend) மற்றும் அதன் மீதான வரிப்பிடித்தம் குறித்த விவரம் (TDS on Dividend) :**

கடந்த 31.03.2021 நாளான்று முடிவுற்ற நிதி ஆண்டிற்கான பங்காதாயமாக வங்கியின் ஒவ்வொரு இரண்டு ரூபாய் முகமதிப்பிலான சமஉரிமை பங்குகளுக்கும் 50 பைசா வீதம் சட்ட அதிகாரம் பெற்ற அமைப்புகள் மற்றும் நடைபெற உள்ள மகாசபை கூட்டத்தின் மூலம் பங்குதாரர்கள் ஆகியோரின் ஒப்புதலை பெற்று வழங்க வங்கியின் இயக்குநர் அவை 28.05.2021 ஆம் தேதி அன்று நடந்த தனது கூட்டத்தில் பரிந்துரைத்துள்ளது. நிதிச்சட்டம் 2020-ன் மூலம் வருமான வரிச்சட்டம் 1961ல் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்களின்படி, 01.04.2020-இல் இருந்து நிறுமங்கள் அளிக்கும் பங்காதாயம் பங்குதாரர்களின் வரிவருமானத்திற்கு உட்பட்டதாகும். எனவே வங்கி அளிக்கும் பங்காதாயத்தில் இருந்து குறிப்பிட்ட விகிதத்தில் வரிப்பிடித்தம் செய்ய வேண்டியுள்ளது. வரிப்பிடித்தம் செய்யும் விகிதமானது பங்குதாரர்களின் குடியுரிமை நிலைப்பாடு (Residential Status) மற்றும் வரிப்பிடித்தம் தொடர்பாக வங்கிக்கு பங்குதாரர்கள் கொடுத்துள்ள ஆவணங்களை பொறுத்து மாறுபடும்.

பங்காதாயம் மீதான வரிப்பிடித்தம் தொடர்பான தகவல்களை உறுப்பினர்களுக்கு வங்கி அனுப்பியுள்ளதோடு பங்காதாயத்தின் மீதான வரிப்பிடித்தத்தில் இருந்து விலக்கு பெறுவதற்கான ஆவணங்களை உறுப்பினர்கள் சமர்ப்பிப்பதற்கு ஏதுவாக வங்கி தனது இணையதளத்தில் https://www.kvb.co.in/investor-corner/tds-on-dividend/ என்ற தொடர்பில் ஒரு வசதியை ஏற்படுத்தியுள்ளது. மேலும், உறுப்பினர்கள் தங்கள் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சலில் இருந்து பங்காதாயத்தின் மீதான வரிப்பிடித்தத்தில் இருந்து விலக்கு பெறுவதற்கான ஆவணங்களை green@skdc-consultants.com மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம். வரிநிர்ணயம் மற்றும் வரி பிடித்தம் தொடர்பான அனைத்து மனுக்களும் 31.07.2021-ம் தேதிக்கு முன்பாக சமர்பிக்கபட வேண்டும்.

**மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யும் வழிமுறைகள் :**

வங்கி, பங்கு மாற்று முகவர் அல்லது முதலீட்டு பங்கேற்பாளர் ஆகியோரிடம் ஏற்கனவே தங்களது மின்னஞ்சல் முகவரியினை பதிவு செய்துள்ள பங்குதாரர்களுக்கு 102வது மகாசபை கூட்ட அறிவிப்பு மற்றும் ஆண்டறிக்கையும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதுவரை தங்களது மின்னஞ்சல் முகவரியினை பதிவு செய்து கொள்ளாத உறுப்பினர்கள் கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றி மின்னஞ்சல் முகவரியினை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:

- (i) பங்குப்பத்திரம் வைத்திருக்கும் உறுப்பினர்கள் (Physical Share Certificate holders) : வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவரிடம் (i.e., M/s SKDC Consultants Ltd), தங்களது பெயர், பங்கு வரிசை எண் (Folio No), மின்னஞ்சல் முகவரி (e-Mail ID), அலைபேசி எண், வருமான வரித்துறை அடையாள எண் (PAN) ஆகியவற்றை குறிப்பிட்டு முறையாக கையொப்பமிடப்பட்ட விண்ணபத்தின் மின்னணு நகலுடன் சுயசான்று அளிக்கப்பட்ட வருமானவரி அடையாள அட்டையின் (PAN Card) மின்னணு நகலையும் இணைத்து info@skdc-consultants.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி பதிவு செய்து கொள்ளலாம்.
- (ii) பங்குகளை மின்னணு (Demat) முறையில் வைத்திருக்கும் உறுப்பினர்கள்: மின்னஞ்சல் முகவரியினை தாங்கள் மின்னணு கணக்கு வைத்துள்ள முதலீட்டு பங்கேற்பாளரிடம் (Depository Participant) பதிவு செய்து கொள்ளலாம்.

**ஸ்ரீனிவாச ராவ் .M**
நிறுமச் செயலர்
தி கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்
(உறுப்பினர் எண் : ACS 19189)

இடம் : கரூர்
தேதி : 20.07.2021